**சுருக்கம்**

பள்ளிக்கல்வி-2005-2006ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் - 130 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் 96 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் நூலக வாய்ப்பினை அதிகரித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (இ2) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 82,
நாள் 16.5.2005

படிக்கப்பட்டவை:

இயக்குநர், பாள்ளிக்கல்வித்துறை, சென்னை கடிதம்
ந.க.எண்.94479 / பிடி1 / 2004 நாள் 6.1.2005.

*****

ஆணை:

உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் அமையப்பெற்ற ஒரு சிறந்த நூலகத்தில், அனைத்துப் பாடங்களும் தேவையான குறிப்புப் புத்தகங்களும் துணை நூல்களும் போதுமான எண்ணிக்கையில் இருப்பது அவசியமாகிறது. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையின்படி மாநிலத்தில் உள்ள பெரும்பாலான பள்ளிகளில் போதுமான நூலக வசதி இல்லை. பள்ளி மாணவர்களிடையே படிக்கும் பழக்கத்தை வளரச் செய்வது உயர்நிலைப் பள்ளிகளின் முக்கிய நோக்கங்களில் ஒன்று கற்பித்தல் ஒரு தொடர் நிகழ்ச்சியாக இருப்பதால் மாணவர்களின் அறிவுத்திறன் வளர அனைத்துப் பள்ளிகளிலும் துணை நூல்கள் குறிப்பிட்ட அளவில் இருக்க வேண்டும். எனவே, 2005-2006ஆம் கல்வி ஆண்டில் 130 அரசு உயர் நிலை மற்றும் 96 மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் உபயோகத்திற்காக நல்ல புத்தங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டது. இதற்கான மொத்தச் செலவு ரூ.37.50 இலட்சம் ஆகும். எனவே, ரூ.37.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு 2005-2006ம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை பரிசீலித்து 2005-2006ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ், 130 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 96 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் நூலக வாய்ப்பினை அதிகரிக்க ரூ.37,50,000/- (ரூபாய் முப்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)

தொடராச் செலவினமாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி-2இல் உள்ள செவினை செய்ய கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2202 பொதுக்கல்வி-02 இடைநிலைக்கல்வி-109 அரசு இடைநிலைப்பள்ளிகள் JB நூலக வசதிகளை மேம்படுத்துதல் 68. புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு (த.தொ.கு. 2202-02-109-JB-6807)

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 22105/Edn-II/2005 நாள் 25.4.2005-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை 6.
மாநிலக்கணக்காயர், சென்னை 18.
மாநிலக்கணக்காயர், சென்னை 18 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-79
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
அனைத்து கருவூல அலுவலர்கள்.

நகல்

நிதி (கல்வி II / BG) துறை, சென்னை 9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை 9
மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
பள்ளிக்கல்வி (பட்ஜெட்) துறை,சென்னை 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.